# செய்தி வெளியீடு

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

### 2016 மூன்றாவது காலாண்டு

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

…………………………………………………………………………………………………………

இலங்கையின், 2016 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான உற்பத்தி அணுகுமுறையால் நடைமுறை மற்றும் நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2016 மூன்றாம் காலாண்டின் (ஜூலை, ஆகஸ்ட் , செப்டெம்பர்) நிலையான (2010) விலையில் ரூபா 2,270,171 மில்லியன்களை அடைந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி 2015 மூன்றாம் காலாண்டில் ரூபா 2,181,275 மில்லியன்களை பதிவு செய்ததுடன், 2016 மூன்றாம் காலாண்டில் 4.1 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை ஏற்படுத்தியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திகள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்குகளை முறையே 7.6 சதவீதம், 30.5 சதவீதம், 56.0 சதவீதம் மற்றும் 5.9 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பகுதியில், விசேடமாக கைத்தொழில் நடவடிக்கைகள் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமாக 6.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டுவதுடன், சேவைகள் நடவடிக்கைகள் 4.7 சதவீதத்தால் 2015 மூன்றாம் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடும் போது அதிகரித்திருக்கின்றது. ஆனாலும் விவசாய நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதம் 1.9 சதவீத மறை வளர்ச்சியையே காட்டியிருக்கின்றது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில்,'தேயிலையின் வளர்ச்சி', 'அரிசியின் வளர்ச்சி', 'இறப்பர் வளர்ச்சி', 'நறுமணச் சரக்கு வகைகளின் வளர்ச்சி' மற்றும் 'மரக்கறிகளின் வளர்ச்சி' என்பவற்றின் கூட்டிய பெறுமதிகள் மறை வளர்ச்சியையே பதிவு செய்துள்ளது: அவை முறையே முன்னைய ஆண்டின் அதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 20.4 சதவீத, 20.0 சதவீத, 17.8 சதவீத, 9.0 சதவீத மற்றும் 7.2 சதவீதங்களாகும். இவ்வேளையில் காடாக்கலும் குத்திகளும் மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பன 2016 மூன்றாம் காலாண்டுப்பகுதியில் முறையே குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதமான 30.0 சதவீதத்தாலும் 20.8 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் 2016 மூன்றாம் காலாண்டுப்பகுதியில் 'கடல் மீன்பிடி' மற்றும் 'விலங்கு உற்பத்தி' 7.4 சதவீத, 6.9 சதவீத வளர்ச்சி வீதங்களை பதிவு செய்ததுடன் , அதேசமயம், 'பழவகைகளின் வளர்ச்சி' மற்றும் 'எண்ணைய் சார்ந்த பழவகைகளின்

வளர்ச்சி' தேங்காய் உள்ளடங்கலாக, மட்டும் சிறிய வளர்ச்சியான 1.3 சதவீத, 0.1 சதவீத வளர்ச்சி வீதங்களை காட்டுகின்றது.

இந்த காலாண்டில் கைத்தொழில் நடவடிக்கைகளின் பங்களிப்பு நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 30.5 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ததுடன் 6.8 சதவீதத்தால் விரிவடைந்தும் உள்ளது. கைத்தொழில் நடவடிக்கைகளின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' நடவடிக்கை கைத்தொழில் நடவடிக்கைகளில் உயர் பங்களிப்பை அளிப்பதுடன் 2015 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இக் காலாண்டில் 14.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இத்துடன் உப நடவடிக்கையான 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' 13.5 சதவீத மிக உயர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. 2016 மூன்றாம் காலாண்டுப் பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகள் 2.7 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.

தயாரிப்பு நடவடிக்கைகளுக்கிடையில், முக்கியமாக 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை கைத்தொழில் நடவடிக்கைகளில் இது வழங்குவதுடன், 2.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்துள்ளது. அதேவேளை 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி' மற்றும் 'இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் உற்பத்தி', முறையே 3.3 சதவீதத்தாலும் 5.8 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. 'மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்', இன் சேர்க்கப்பட்ட பெறுமதி இக் காலப் பகுதியை கருதும்போது 7.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2016 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பொழுதில் மூன்று பிரதான நடவடிக்கைகளில், சேவைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (56.0 சதவீத) இது வழங்குவதுடன் 4.7 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'தொலைத்தொடர்பு', 'கல்விச் சேவைகள்', மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்', குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 12.9 சதவீத, 12.3 சதவீத, 11.7 சதவீத, 10.2 சதவீத மற்றும் 4.6 சதவீதத்தை 2015 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது தாங்கி நிற்கிறது.

மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் அரச அறிவித்தலின் வெளியீட்டின்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2016 இன் மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.statistics.gov.lk

டீ. ஜீ.எஸ். ஜீ. முனசிங்க
பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

---

*இந்த ஊடக அறிக்கையை 2016 டிசம்பர் 15 ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முதல் பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்க.*